நகராட்சி அலுவலகம்,
களக்காடு.
நாள். 06.01.2026.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2026ம் வருடம் ஜனவரி மாதம் 12ம் தேதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>12.01.2026</td><td>695</td><td><u>மன்றப்பொருள்: 1</u><br>களக்காடு நகராட்சி பொதுநிதியின் கீழ் 27 வார்டுகளிலும் உள்ள மழைநீர் வடிகால்களை துரர்வாரும் பணிக்காக 17.10.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்திற்கு இப்பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள மழைநீர் வடிகால்களை தூர் வாரும் பணி.</td><td rowspan="2">3.00</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>3.68 % கூடுதல்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியநபரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம், இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புக்கொள்ளலாம். ந.க.எண். 2350/2025/இ1.</td><td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய J. ஜஸ்டின் பிரதீப் அவர்களது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>12.01.2026</td>
<td>696</td>
<td>
<u>மன்றப் பொருள்: 2</u><br>
தமிழ்நாடு அரசு நான்கு ஆண்டு சாதனைகளாக களக்காடு நகராட்சிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் குறித்து தினசரி நாளிதழ் மற்றும் தொழில்மலர்களில் விளம்பரம் வெளியிட்ட வகைக்கு கீழ்க்கண்டாவறு பட்டியல் தொகை கோரப்பட்டுள்ளது. இத்தொகையினை சம்பந்தப்பட்ட நாளிதழ்களுக்கு வழங்க மன்ற
<table>
<tr><th>வ. எண்.</th><th>நாளிதழ் பெயர்</th><th>பட்டியல் எண் மற்றும் நாள்.</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>தினத்தந்தி</td><td>2526TVL371063364 / 25.09.2025</td><td>23688</td></tr>
<tr><td>2.</td><td>தினமணி</td><td>Invoice No. TNI 1451239/08.10.2025</td><td>9975</td></tr>
<tr><td>3.</td><td colspan="2">மொத்தம்</td><td>33663</td></tr>
</table>
அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம். (ந.க.எண்.2703–4/2024/இ1).
</td>
<td>அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>697</td>
<td>
<u>மன்றப்பொருள்: 3</u><br>
களக்காடு நகராட்சில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (2025–2026) திட்டம் கீழ் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4492/224/EA2 நாள். 14.10.2025ன்படி அனுமதி வழங்கப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 07.10. 2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண்.3 கீழப்பத்தை மேல் நிலை நீர்தேக்க தொட்டி, வார்டு எண். 7 கீழ கருவேலன்குளம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும்</td><td rowspan="2">44.03</td><td>திரு. P. மாடசாமி, திருநெல்வேலி</td><td>0.01% குறைவு</td></tr>
<tr><td>திருமதி. பொன்மலர், திருநெல்வேலி</td><td>0.23% கூடுதல்</td></tr>
</table>
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய P.மாடசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>வார்டு எண். 26 கோவில்பத்து மேல் நிலை நீர் தேக்க தொட்டி ஆகியவற்றில் சுற்றுசுவர் கட்டும் பணி.</td><td></td><td></td><td></td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2056/2025/இ1).
</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>698</td>
<td>
<u>மன்றப்பொருள்: 4</u>
களக்காடு நகராட்சில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (2025–2026) திட்டம் கீழ் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4492/224/EA2 நாள். 14.10.2025ன்படி அனுமதி வழங்கப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 07.10. 2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2"></td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 1 ஆசாத்புரம் கிழக்கு பகுதி முதல் சந்து, வார்டு எண்.9 சிங்கம்பத்து முஸ்லீம் தெரு, வார்டு எண். 11 கோமதியம்மன் சன்னதி வடக்கு தெரு வார்டு எண்.15 ஆவுடைவிலாசம் தெரு, வார்டு எண்.2 மஞ்சுவிளை மெயின் ரோடு வடக்கு பகுதி, வார்டு எண். 25 சிதம்பராபுரம் தெற்கு மாசி தெரு, வார்டு எண். 8 கீழகருவேலன் குளம் இந்திரா காலனி வடக்கு</td><td rowspan="2">44.03</td><td>திரு. P. மாடசாமி, திருநெல் வேலி</td><td>0.01% குறைவு</td></tr>
<tr><td>திருமதி. பொன்மலர், திருநெல் வேலி</td><td>0.23% கூடுதல்</td></tr>
</table>
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.P. மாடசாமி அவர்களது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>பகுதி கீழத்தெரு, வார்டு எண். 26 கோவில்பத்து யாதவர் வடக்கு தெரு ஆகிய தெருக்களில் கழிவு நீர் கால்வாய் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும்பணி.</td><td></td><td></td><td></td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2056/2025/இ1).
</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>699</td>
<td>
<u>மன்றப்பொருள்:5</u>
களக்காடு நகராட்சில் பொது நிதி (2025–2026) ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 10.11.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொ கை (ரூ. இலட்ச த்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சிக்குட்பட்ட சமுதாய கழிப்பிடங்கள், பொதுக்கழிப்பிடங்கள், நுண்னுர குடில்கள், ஆகியவற்றில் உள்ள பழுதுகளை சீர் செய்தல் மற்றும் சரோஜினிபுரம் பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மும்முனை மின் இணைப்பு செய்யும் பணி.</td><td rowspan="2">1.75</td><td>திரு. J . ஜஸ்டின் பிரதீப், களக்காடு</td><td>1.47% கூடுதல்</td></tr>
<tr><td>திருமதி. என்.எம். புஷ்பம், களக்காடு</td><td>0.02% குறைவு</td></tr>
</table>
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி.என்.எம். புஷ்பம் அவர்களது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2160/2025/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>700</td>
<td><u>மன்றப்பொருள்:6</u><br>களக்காடு நகராட்சியில் 6வது மாநில நிதிக்குழு மான்யம் திட்டம் 2025–2026ன் கீழ் இந்நகராட்சி வார்டு எண். 20 வியாசராஜபுரம், அண்ணா சாலையில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தில் முதல் தளத்தில் வணிக வளாகங்கள் கட்ட ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 29869/2025/எம்ஏ1 நாள். 23.10.2025.ன்படி அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து அப்பணிக்காக 18.11.2025 அன்று கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 20 வியாசராஜபுரம் அண்ணா சாலையில் கட்டப்பட்டு வரும் வணிக வாளகத்தில் முதல் தளத்தில் கூடுதல் வணிக வளாக கட்டிடம் கட்டும் பணி.</td><td rowspan="2">50.00</td><td>திரு. V . முருகையா பாண்டியன்</td><td>0.67% கூடுதல்</td></tr>
<tr><td>திரு, M. அய்யம் பெருமாள்</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2359/2025/இ1).</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.அய்யம்பெருமாள் அவர்களது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 12.01.2026 | 701 | **<u>மன்றப்பொருள்: 07</u>**<br>பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கடிதம் ந.க.எண் : 1719/2025/அ1 நாள்: 03.11.2025–ன்படி களக்காடு நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கடைகள் 22–ஐ மாத வாடகை முறையில் குத்தகைக்கு ஒப்படைக்க நாள்.14.11.2025 வெள்ளிக்கிழமை பொது ஏலம்/ மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தினகரன் நாளிதழில் நாள். 05.11.2025ல் விளம்பரம் செய்யப்பட்டது. தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.15,687/–ஐ KAL PUBLICATIONS (P) LTD, VANNRAPET, TIRUNELVELI. அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 1719/2024/அ1). | அனுமதி வழங்கப்பட்டது. |
| 12.01.2026 | 702 | **<u>மன்றப்பொருள்: 08</u>**<br>பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கடிதம் ந.க.எண் 2265/2025/அ1 நாள் 03.11.2025–ன்படி களக்காடு நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 17ல் ஜவஹர் வீதி பகுதியில் அமைத்துள்ள கடைகள் 12எண்ணம் மற்றும் வார்டு எண் 20ல் வியாசராஜபுரம் அண்ணாசாலை பகுதியில் அமைத்துள்ள கடைகள் 6எண்ணம் ஆகியவகைளை மாத வாடகை முறையில் குத்தகைக்கு ஒப்படைக்க நாள். 12.11.2025 புதன் கிழமை பொது ஏலம்/மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்க்கு தினதந்தி நாளிதழில் நாள்: 05.11.205ல் விளம்பரம் செய்யப்பட்டது. தினதந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.26056.80/–ஐ THE THANTHI TRUST, MADUARAI ROAD, TIRUNELVELI. அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 1719/2024/அ1). | அனுமதி வழங்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 12.01.2026 | 703 | **<u>மன்ற பொருள்: 09</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19, வியாசராஜபுரம் சேனையர் தெருவில், அருணா மண்டபம் எதிரில் உள்ள எட்டு (8) கடைகளுக்கு வசூல் செய்யப்பட்ட மாத வாடகையுடன் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரியினன (GST) ஒவ்வொரு மாதமும் உரிய தலைப்பில் செலுத்தப்பட்ட விபரத்தினை மத்திய அரசின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுவருகிறது. சரக்கு மற்றும் சேவை வரியினை (GST) ஏப்ரல் 2025 முதல் நவம்பர் 2025 முடிய மாத வாடகையுடன் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரியினை உரிய தலைப்பில் செலுத்தப்பட்டு அதன் விபரத்தினை மத்திய அரசின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யும் பணியினை மேற்கொண்டு வரும் Relywin Tax Info Services என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ. 9,000/-ஐ வழங்க மன்ற அனுமதிக்காக.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**:<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 272/2023/அ1). | அனுமதி வழங்கப்பட்டது. |
| 12.01.2026 | 704 | **<u>மன்றப்பொருள்: 10</u>**<br>தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ல் விதி 316(11)(C) ன்படி ஐந்து சதவீத கடைகள் அதிகபட்ச ஏலத்தொகைக்கு இணையாக செலுத்தத் தயாராக உள்ள, ஊனமுற்றோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும், என உள்ளது.<br>மேற்கண்ட விபரப்படி ஊனமுற்றோருக்கு கடைகள் ஒதுக்கீடு செய்து, விதியின்படி அதிகபட்ச ஏலத்தொகைக்கு இணையாக செலுத்த தயாராக உள்ள ஊனமுற்றோருக்கு மேற்கண்ட கடைகளை ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்</th><th>வார்டு எண்</th><th>தெரு பெயர் / இருப்பிடம்</th><th>மொத்த கடைகள்</th><th>ஊனமுற்றோருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் கடைகள் எண்ணிக்கை 5%</th></tr></table> | உரிய விதிமுறைப்படி வழங்க அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>17</td><td>ஜவஹர் வீதி / (பழைய பேரூராட்சி அலுவலகம்)</td><td>12</td><td>1</td></tr>
<tr><td>2</td><td>19</td><td>வியாசராஜபுரம் சேனையர் தெரு / புதிய பேருந்து நிலைய கடைகள்</td><td>32</td><td>2</td></tr>
<tr><td>3</td><td>20</td><td>வியாசராஜபுரம் அண்ணாசாலை / பொத ப்பணித்துறை அலுவலகம் அருகில்</td><td>16</td><td>1</td></tr>
<tr><td>4</td><td>9</td><td>சிங்கம்பத்து முஸ்லீம் கீழத்தெரு / புதிய மார்க்கெட் வணிக கடைகள்</td><td>56</td><td>3</td></tr>
</table>
மேற்கண்ட விபரப்படி ஊனமுற்றோருக்கு கடைகள் ஒதுக்கீடு செய்து, விதியின்படி அதிகபட்ச ஏலத்தொகைக்கு இணையாக செலுத்த தயாராக உள்ள ஊனமுற்றோருக்கு மேற்கண்ட கடைகளை ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
மன்றம் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. (ந.க.எண் : 1719/2024/அ1).
</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>705</td>
<td>
<u>மன்றப்பொருள்: 11</u><br>
களக்காடு நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் : 9 சிங்கம்பத்து முஸ்லிம் கீழத்தெரு பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–2024 ன்படி 4.28 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை வணிக வளாகம் கடைகளுக்கு முன் ஏலம் மூலம் நடவடிக்கை மேற்க்கொள்ள மன்ற அனுமதிக்கும்.<br>
ஆ) புதிய பேருந்து நிலைய வளாகத்தில் மூலதன மானியம் 2023–2024 திட்டத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு பொது ஏலம் மூலம் நடவடிக்கை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் : 3001/2025/அ1).
</td>
<td>சட்ட விதிமுறைகளை பின்பற்றி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>12.01.2026</td>
<td>706</td>
<td>
<u>மன்றப்பொருள்: 12</u>
களக்காடு நகராட்சிக்கு சொந்தமான கடைகள் வியாசராஜபுரம் அண்ணாசாலை பொதுப்பணித்துறை அலுவலகம் அருகிலுள்ள கடைகள் மற்றும் ஜவஹர் வீதி தெருவிலுள்ள பழைய அலுவலகத்தில் அமைந்துள்ள கடைகளுக்கும் களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குளங்களில் மீன்பாசி உரிமம் மற்றும் களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மரங்களில் மகசூல் அனுபவிக்கும் உரிமம் ஆகியவற்றிக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 12.11.2025 தேதி அன்று கோரப்பட்டது.
மேற்கண்ட மறு பொது ஏலத்தில் ஜவஹர் வீதி பகுதியில் உள்ள பழைய பேரூராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள கடைகளுக்கு எந்த நபரும் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை. வியாசராஜபுரம் பொதுப்பணித்துறை அலுவலகம் அருகில் அமைந்துள்ள 6 கடைகள், களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குளங்களில் மீன்பாசி உரிமம் மற்றும் களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மரங்களில் மகசூல் அனுபவிக்கும் உரிமம் ஆகியவற்றிக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர். மேற்படி கடைகளுக்கு அரசு மதிப்பு ரூ.6000/- என நிர்ணயம் செய்யப்பட்டு மற்றும் மாணிக்கன் குளம் மீன்பாசி உரிமத்திற்கு அரசு மதிப்பு ரூ2,67,400/- என நிர்ணயம் செய்யப்பட்டு, மறு பொது ஏலம் நடைபெற்றது. மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>கடை எண்.</th><th>மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து</th><th>ஏலக் கேள்விகள்</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை</th><th>உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூபாய்</th></tr>
<tr><td>1.</td><td rowspan="2">2</td><td>திரு. ஜெயசிங் ராஜ பாண்டியன்</td><td>6,200/-</td><td>பெறப்படவில்லை</td><td rowspan="2">திரு.N. பிச்சை முத்து ரூ.6300/- உயர்ந்தபட்ச ஏலத் தொகையாக கேட்டுள்ளார்.</td></tr>
<tr><td>2.</td><td>திரு.N. பிச்சை முத்து</td><td>6,300/-</td><td>பெறப்படவில்லை</td></tr>
</table>
</td>
<td>அலுவலக குறிப்பின்படி 2, 4, 7, 9, 13 மற்றும் 14 ஆகியோரின் ஏலம் அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | 10 | திரு S.செல்வன்சந்தியாகர் | 6,400/– | பெறப்படவில்லை | திருமதி N.ரம்யா ரூ.6500/– உயர்ந்தபட்ச ஏலத் தொகையாக கேட்டுள்ளார். |
| 4. | | திருமதி N.ரம்யா | 6,500/– | பெறப்படவில்லை | |
| 5. | | 11 | | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் ஏலதாரர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. | |
| 6. | 12 | திரு K.செய்யது ஹனிபா | 6,200/– | பெறப்படவில்லை | திரு A.S.A. பாதுஷா ரூ.6300/– உயர்ந்தபட்ச ஏலத் தொகையாக கேட்டுள்ளார். |
| 7. | | திரு A.S.A. பாதுஷா | 6,300/– | பெறப்படவில்லை | |
| 8. | | திரு K.கற்பக ராஜா | 6,100/– | பெறப்படவில்லை | |
| 9. | 13 | திருS. சுரேஷ் | 6,800/– | பெறப்படவில்லை | திருS. சுரேஷ் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.6800/– கேட்டுள்ளார். |
| 10. | | திருV. சுப்பையா | 6,700/– | பெறப்படவில்லை | |
| 11. | | த ரு A.ராஜேஸ் | கேள்வி கோரப்படவில்லை | பெறப்படவில்லை | |
| 12. | 14 | திரு.ப. நம்பி | 6,400/– | பெறப்படவில்லை | திரு.அ.ஜெயராம் அவர்கள் உயர்ந் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | | திரு.அ .ஜெய ராம் | 6,500/ – | பெறப் படவி ல்லை | தபட்ச ஏலத் தொ கை ரூ.650 0/– கேட்டு ள்ளார். |

**களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குளங்களில் மீன்பாசி உரிமம் மற்றும் களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மரங்களில் மகசூல் அனுபவிக்கும் உரிமம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | ்கா | 2,67,600 /– | பெறப் படவி ல்லை | மாணிக்கன்குளம் மீன்பாசி உரிமத்திற்கு திருமதி பாலகெங்கா அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.267600/– கேட்டுள்ளார். |
| 15. | ஜெயபா | 2,67,500 /– | பெறப் படவி ல்லை | |
| 16. | திரு.ஹெ லன் | கேள்வி கோரப் படவில் லை | பெறப் படவி ல்லை | சாலை வாய்க்காலில் உள்ள தென்னை மரங்களின் மகசூல் அனுபவிக்கம் உரிமத்திற்கு திரு.ஹெலன் அவர்கள் ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார். |
| 17. | திரு.க ணேசன் | கேள்வி கோரப் படவில் லை | பெறப் படவி ல்லை | கொம்புக்காரன் தெருவிற்கு போகும் பாதையிலுள்ள தென்னை மரங்களின் மகசூல் அனுபவிக்கம் உரிமத்திற்கு திரு.கணேசன் அவர்கள் ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்ட கடை உரிமத்திற்காக உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர்களுக்கு கடை உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் சாலை ஓரங்களில் உள்ள தென்னை மரங்களின் மகசூல் அனுபவிக்கம் உரிமத்திற்கு திரு.ஹெலன் அவர்கள் ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார். மற்றும் கொம்புக்காரன் தெருவிற்கு போகும் பாதையிலுள்ள தென்னை மரங்களின் மகசூல் அனுபவிக்கம் உரிமத்திற்கு திரு.கணேசன் அவர்கள் ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார். எனவே ஏலதாரர் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு ஏலத்தொகை கோரப்பட்டுள்ளதால், மேற்கண்ட குத்தகை இனங்களை மறு ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>:** வரிசை எண் 2,4,7,9,13,மற்றும் 14 ஆகியோரின் ஏலக்கேள்விகள் அனுமதிக்கலாம். (ந.க.எண் : 2265/2025/அ1). | |
| 12.01.2026 | 707 | **<u>மன்றப்பொருள்:13</u>**<br>நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் காணொளி ஆய்வு கூட்டத்தில் களக்காடு நகராட்சியில் சொத்துவரி, குடிநீர் வரி, தொழில்வரி, மற்றும் வரியில்லா இனங்கள் , குத்தகை இனங்களுக்கு 2025–2026 ஆம் ஆண்டிற்கான கேட்பு தொகையினை வசூல் செய்திட ஏதுவாகவும், ஏலம் போகாத குத்தகை இனங்களுக்கு Flex board வைத்து பொதுமக்களுக்கு விளம்பரம் மூலம் அறிவிப்பு வழங்கிட பேனர், மற்றும் ஆட்டோ விளம்பரம் நாளிதழில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 200000/– க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>:** மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>12.01.2026</td>
<td>708</td>
<td>
<u>மன்றப்பொருள்: 14</u><br>
களக்காடு நகராட்சியில் பொதுநிதி 2025–2026ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 26.11.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத் தில்)</th><th>ஒப்பந்ததார ர்கள்</th><th>கூடுத ல்/ குறை வு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 25 தெற்கு ரதவீதி நொச்சியடி அம்மன் கோவில் அருகில் உள்ள கிணறு மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களை பராமரிப்பு செய்யும் பணி.</td><td rowspan="2">3.00</td><td>திரு. A. இராதா கிருஷ்ண ன்,</td><td>0.03% குறை வு</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>2.57% கூடுத ல்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.A. இராதாகிருஷ்ணன் அவர்களது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>709</td>
<td>
<u>மன்றப்பொருள்:15</u><br>
களக்காடு நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரப்படும் திட்டப்பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட கேட்பு படி கீழ்கண்டவாறான தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண் .</th><th>திட்டத்தி ன் பெயர்</th><th>நாளிதழ் பெயர்</th><th>பட்டியல் எண் மற்றும் நாள்.</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>15வது நிதிக்குழு மான்யத்தி ட்டம் 25–26 (Untied)</td><td>தினசூரிய ன், மதுரை</td><td>Bill No.MA.2867 Dated 23.11.2025.</td><td>14784</td></tr>
</table>
</td>
<td>அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2.</td><td>தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்புறம்) (FSTP I&D)</td><td>Deccan chronicle, chenai<br><br>தினமணி</td><td>Bill No.DIPR/AAA/0579/25-26 Dated 19.11.2025 (Accord Advertising Agencies, Chennai-34)</td><td>72727</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td></td><td>87511</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>மேற்கண்ட விளம்பரக்கட்டணங்களை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>710</td>
<td>
<u>மன்றப்பொருள்:16</u><br>களக்காடு நகராட்சியில் பொதுநிதி 2025-2026ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 28.11.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகாட்சிக்கு சொந்தமான குடிநீர் திட்ட அமைப்புகளில் உள்ள திரவ குளோரிநேசன் பம்புகளில் உள்ள பழுதினை சீர் செய்யும் பணி.</td><td rowspan="2">3.30</td><td>G.R. Enterprises, Sankarankovil</td><td>0.58% குறைவு</td></tr>
<tr><td>திரு. Z.சாகுல் ஹமீது, சங்கரன் கோவில்</td><td>3.77% கூடுதல்</td></tr>
<tr><td>2.</td><td>களக்காடு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சாலைகளில் ஏற்பட்டுள்ள</td><td>5.00</td><td>திரு. P.மாடசாமி, திருநெல்வேலி</td><td>0.03% குறைவு (Single Tender)</td></tr>
</table>
</td>
<td>அலுவலக குறிப்பின்படி பணி-1 குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய G.R. Enterpricesக்கு பணி -2 திரு.மாடசாமி என்பவரது ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>சிறு பள்ளங்கள் சீரமைத்தல் மற்றும் சாலை ஒட்டுப்பணிக (Patches / Pothole)</td><td></td><td></td><td></td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>711</td>
<td>
<u>மன்றப்பொருள்:17</u><br>
களக்காடு நகராட்சியில் பொதுநிதி 2025-2026ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 04.12.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல்/ குறைவு</th></tr>
<tr><td rowspan="3">1.</td><td rowspan="3">களக்காடு நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான கணனி மற்றும் பிரிண்டர்கள் சப்ளை செய்து நிறுவுதல் பணி.</td><td rowspan="3">5.00</td><td>Hyperconnect Technologies, Krishnagiri, Hosur.</td><td>11.95% குறைவு</td></tr>
<tr><td>Tmt. N.M.Pushpam, Kalakad</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>Thiru. J.Justin Pradeep. kalakad</td><td>2.50% கூடுதல்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Hyperconnect Technologies, Krishnagiri, Hosur என்பவது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 12.01.2026 | 712 | **<u>மன்றப்பொருள்:18</u>**<br>களக்காடு நகராட்சியில் துரய்மை இந்தியா திட்டம் 2022-2023 (நகர்புறம் 2.0)ன் கீழ் கசடு கழிவு மேலாண்மை மற்றும் பயன்படுத்தபட்ட நீர் மேலாண்மை பணிகளுக்காக படலையார் குளம் கிராமத்தில் கட்டப்பட்டுவரப்படும் கழிவு நீர் சுத்தகரிப்பு மற்றும் மலக்கசடு சுத்தகரிப்பு நிலையத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து முறையான அனுமதி பெற வேண்டும், (Consent to Establish) அதன் பொருட்டு மேற்படி வாரியத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டதில் உரிய அனுமதி வழங்க ரூ. 172410/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து நானூற்று பத்து மட்டும்) செலுத்த இணையவழியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>மேற்கண்டவாறான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். | சட்டபடி செலவிட அனுமதி அளிக்கப்பட்டது. |
| 12.01.2026 | 713 | **<u>மன்றப்பொருள் :19</u>**<br>களக்காடு நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2025-2026ன் கீழ் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகள், கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் ஆகிவற்றின் தரம் குறித்து மூன்றாம் தரப்பு ஆய்வாக (Third Party Inspection) ஆய்வு செய்து அறிக்கை செய்ய அரசு பொறியியல் கல்லுரரி, முதல்வர், திருநெல்வேலி அவர்களை கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி பணிகளை ஆய்வு செய்து அறிக்கை செய்ய கட்டணமாக ரூ. 63130/-செலுத்த கோரப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>மேற்கண்டவாறான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். | சட்ட விதிப்படி செலவிட அனுமதி அளிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>12.01.2026</td>
<td>714</td>
<td>
<u>மன்றப்பொருள் :20</u>
களக்காடு நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2025–2026ன் கீழ் கிழ்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிருவாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். DMA/483/2025/EA–2 ள். 14.11.2025ன்படி அனுமதி வழுங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 10.12.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொ கை (ரூ. இலட்ச த்தில்)</th><th>ஒப்பந்த தாரர்க ள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண்.1 ஆசாத்புரம் கீழத்தெரு முதல் சந்து (2) ஆசாத்புரம் கீழத்தெரு முதல் சந்து (3) ஆசாத்புரம் கீழத்தெரு முதல் உட்சந்து (2) ஆசாத்புரம் முதல் உட்சந்து (1) ஆசாத்புரம் கீழத்தெரு முதல் சந்து (4) ஆசாத்புரம் கீழத்தெரு இரண்டாம் சந்து (1) வார்டு எண். 6 சங்கர் நகர் தெற்கு தெரு, சங்கர் நகர், சங்கர் நகர் வடக்கு பகுதி தெரு, ஞானசம்பந்தபுர ம் மூன்றவது சந்து, வார்டு எண். 21 கோவில்பத்து ஆத்தங்கரை தெரு (1) கோவில்பத்து குண்டு தெரு (1) கோவில்பத்து</td><td rowspan="2">51.43</td><td>திரு. J.ஜஸ்டி ன் பிரதீப், களக்கா டு</td><td>0.01% குறைவு</td></tr>
<tr><td>திருமதி .N.M. புஷ்பம், களக்கா டு.</td><td>1.22% கூடுதல்</td></tr>
</table>
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.J. ஜஸ்டின் பிரதீப் என்பவரது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><table><tr><td></td><td>குண்டு தெரு (2) கோவில்பத்து குண்டு தெரு (3 ) வார்டு எண். 27கோவில்பத்து பெரிய தெரு (12) ஆகிய தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி.</td><td></td><td></td><td></td></tr></table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>12.01.2026</td><td>715</td><td><u>மன்றப்பொருள்:21</u><br>
நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களது அலுவலத்தில் உள்ள கூட்ட அரங்கிற்கு அத்தியாவசியமாக இரண்டு எண்ணம் 65 அங்குலம் வண்ண தொலைகாட்சி பெட்டி தேவைபடுவதாகவும் அதனை களக்காடு நகராட்சி நிதியில் இருந்து கொள்முதல் செய்து தருமாறு கடித எண். 26/2021/ஆ1 நாள். 03.11.2025ன் வழி கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி வண்ண தொலைகாட்சி பெட்டி இரண்டு எண்ணம் கொள்முதல் செய்ய ரூ.72296/- ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.</td><td>அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>12.01.2026</td>
<td>716</td>
<td>

<u>மன்றப்பொருள்:22</u>

களக்காடு நகராட்சியில் 15 நிரந்தர தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பொது சுகாதார பணிகளுக்கு தேவையான தளவாட சாமான்கள் வாங்கி பணியாளர்களுக்கு வழங்கவும், தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்குவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சி அலுவலகத்தில் தேவையான தளவாட சாமான்கள் இருப்பில் வைத்திருக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. வடகிழக்கு பருவமழையை கருத்தில் கொண்டும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.250000/- ஆகும். எனவே, அதற்கான செலவுத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

<table>
<tr><th>வ.எண்.</th><th>தளவாட சாமான்கள் விபரம்</th><th>எண்ணம்</th></tr>
<tr><td>1.</td><td>மண் வெட்டி</td><td>12 எண்ணம்</td></tr>
<tr><td>2.</td><td>குப்பை கூடை</td><td>15 எண்ணம்</td></tr>
<tr><td>3.</td><td>நீண்ட கரண்டி 8 அடி</td><td>12 எண்ணம்</td></tr>
<tr><td>4.</td><td>அரிவாள்</td><td>10 எண்ணம்</td></tr>
<tr><td>5.</td><td>கடப்பாறை கம்பி</td><td>5 எண்ணம்</td></tr>
<tr><td>6.</td><td>மரக்கைப்பிடியுடன் கூடிய பிக்காஸ்</td><td>8 எண்ணம்</td></tr>
<tr><td>7.</td><td>கைமார் (தென்னை ஈக்குமார்)</td><td>50 எண்ணம்</td></tr>
<tr><td>8.</td><td>நீண்ட கைப்பிடியுடன் கூடிய கைமார்</td><td>30 எண்ணம்</td></tr>
<tr><td>9.</td><td>கை அகப்பை</td><td>20 எண்ணம்</td></tr>
<tr><td>10.</td><td>டார்ச்லைட்</td><td>5 எண்ணம்</td></tr>
<tr><td>11.</td><td>பாறை கயிறு (50 அடி)</td><td>2 எண்ணம்</td></tr>
<tr><td>12.</td><td>மரம் அறுக்கும் இயந்திரம்</td><td>2 எண்ணம்</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

</td>
<td>அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 12.01.2026 | 717 | **<u>மன்றப்பொருள்:23</u>**<br><br>களக்காடு நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வார்டு எண்.04, கீழப்பத்தை மற்றும் வார்டு எண்.15, புதுத்தெரு ஆகிய இரண்டு இடங்களில் நுண்ணுயிர் உரக்குடில் உள்ளது. நாள்தோறும் 27 வார்டுகளிலும் சேகரம் செய்யப்படும் குப்பைக்கழிவுகள் அனைத்து நுண்ணுயிர் உரக்குடிலுக்கு எடுத்து சென்று இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது. இதற்காக பயன்படும் இயந்திரங்களில் பழுது ஏற்பட்டு தினசரி சேகரம் ஆகும் குப்பைகளை அகற்றுவதில் தாமதம் ஏற்படுகிறது. எனவே, பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு இயந்திர பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டி களக்காடு நகராட்சி சுகாதார ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 2025-2026ம் ஆம் நிதியாண்டிற்கு உத்தேசமாக தொகை ரூ.1,50,000/- செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் ஒப்புக்கொள்ளலாம். | அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 12.01.2026 | 718 | **<u>மன்றப்பொருள்:24</u>**<br><br>களக்காடு நகராட்சியின் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களின் கழிவுநீர், கழிப்பறை கழிவுநீர் சேகரித்தல், கொண்டு செல்லுதல், அகற்றுதல், ஒழுங்குப்படுத்துதல் மற்றும் அபராதம் விதித்தலுக்கு கசடு கழிவு மேலாண்மை விதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இன் அத்தியாயம் X-a பிரிவு 199 அத்தியாயம் XI அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு மாவட்ட அரசு கிளை அச்சகத்திற்கு அச்சுக்கட்டணமாக பக்கம் ஒன்றிற்கு ரூ.3000/- வீதம் மொத்தம் 20 பக்கங்களுக்கு ரூ.60,000/- ஐ அரசு கணக்குத் தலைப்பில் [எண். 03001-DIRECTORATEAA23902] செலுத்தவும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் | அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:** மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் ஒப்புக்கொள்ளலாம். | |
| 12.01.2026 | 719 | **<u>மன்றப்பொருள்:25</u>**<br>களக்காடு நகராட்சியில் நகர்மன்ற தலைவரின் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனத்திற்கு (எண்.TN72CV2718) 40,000 கி.மீ. பொது பராமரிப்பு மற்றும் வாகனத்தின் மின்கலன் (Battery) மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பராமரிப்பினை திருநெல்வேலி டெரிக் மோட்டார் என்ற நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவு தொகை ரூ.23515/-ஐ நகராட்சியின் வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் ஒப்புக்கொள்ளலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 12.01.2026 | 720 | **<u>மன்றப்பொருள்:26</u>**<br>களக்காடு நகராட்சியில் 15 நிரந்தர தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பொது சுகாதாரப் பிரிவில் பணி செய்து வரும் சுகாதார பணியாளர்களுக்கு மழைக்காலங்கள் மற்றும் நோய் தொற்று பரவுவதை தடுப்பதற்கான பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி பணியாளர்களுக்கு வழங்கவும், தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்குவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை இருப்பில் வைத்திருக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. வடகிழக்கு பருவமழையை கருத்தில் கொண்டும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.65000/- ஆகும். எனவே, அதற்கான செலவுத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. | அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பொருள் விபரம்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td>மழைக் கவசம்</td><td>12</td></tr>
<tr><td>2.</td><td>ஒளிரும் தன்மையுடைய ஜாக்கெட்</td><td>15</td></tr>
<tr><td>3.</td><td>முகக்கவசம்</td><td>12</td></tr>
<tr><td>4.</td><td>கம்பூட்</td><td>10</td></tr>
<tr><td>5.</td><td>கையுறைகள்</td><td>5</td></tr>
<tr><td>6.</td><td>கை கழுவும் சோப்</td><td>8</td></tr>
<tr><td>7.</td><td>தலைக்கவசம்</td><td>50</td></tr>
<tr><td>8.</td><td>செருப்பு</td><td>30</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>721</td>
<td>
<u>மன்றப்பொருள்:27</u><br>
களக்காடு நகராட்சி 27 வார்டுகளை கொண்டுள்ளது. 234 தெருக்கள், 12299 குடியிருப்புகள், 2192 வணிக நிறுவனங்கள் மற்றும் 19 கல்வி நிறுவனங்கள் உள்ளது. பொது சுகாதாரப் பிரிவின் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பை கழிவுகளை சேகரம் செய்யப்பட்டு அகற்றப்படுகிறது. கழிவுநீர் ஓடைகள் சுத்தம் செய்தல், டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல், உட்புற வெளிப்புற கொசுப்புகை மருந்து அடித்தல் போன்ற பணிகளை சிறப்பாக செய்யவும், பொதுமக்கள் நலன் கருதி 2025-2026ம் ஆண்டு 4 மாதங்களுக்கு தேவையான கிருமிநாசினி பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டி களக்காடு நகராட்சி சுகாதார ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கீழ்கண்ட உபகரணங்களுக்கான உத்தேச செலவினம் ரூ.9,85,000/-ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விபரம்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td>பிளிச்சீங் பவுடர்</td><td>3 டன்</td></tr>
<tr><td>2.</td><td>கருப்பு பினாயில்</td><td>200 லி</td></tr>
<tr><td>3.</td><td>P.T. பவுடர்</td><td>200 கி.கி</td></tr>
<tr><td>4.</td><td>பைரித்திரம்</td><td>200 லி</td></tr>
<tr><td>5.</td><td>அபேட் (டெமிபாஸ்)</td><td>100 லி</td></tr>
<tr><td>6.</td><td>மாலத்தியான் டெக்னிக்கல்</td><td>100 லி</td></tr>
</table>
</td>
<td>அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>7.</td><td>செண்ட் லோசன்</td><td>100 லி</td></tr>
<tr><td>8.</td><td>லெமன் கிராஸ் ஆயில்</td><td>100 லி</td></tr>
<tr><td>9.</td><td>வெள்ளை பினாயில்</td><td>100 லி</td></tr>
<tr><td>10.</td><td>சுண்ணாம்புத்தூள்</td><td>6 டன்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>722</td>
<td>
மன்றப்பொருள்:28<br>
களக்காடு நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அனைத்து வார்டுகளிலும் உள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்களில் இருந்து மட்கும், மட்காத குப்பைக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு வரப்படுகிறது. இதில் அபாயகரமான கழிவுகளான சானிட்டரி நாப்கின்ஸ், டயப்பர், மருந்து கழிவுகள் மற்றும் குறியீடு பொறிக்கப்பட்ட பிளாஸ்டிக் பைகளை கையாளுதல் மற்றும் அகற்றுதல் பணியினை மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் கையாளும் விதமாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள Aseptic Systems BMWM என்ற நிறுவனத்தின் மூலம் அகற்றுவதற்கு மாதம் ஒன்றிற்கான கட்டணம் ரூ. 12000/−ம், நாள் ஒன்றுக்கு 15 கிலோவிற்கு கூடுதலான கழிவுகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.0.56/− பைசா வீதமும், GST மற்றும் இதர செலவினம் உட்பட பொதுநிதியில் வழங்குவதற்கும் மேற்படி நிறுவனத்திடம் உரிய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
அலுவலக குறிப்பு: பொது சுகாதார நலன் கருதி Aseptic Systems BMWM, Tirunelveli என்ற நிறுவனத்தின் மூலம் அபாயகரமான கழிவுகளை கையாளுதல் மற்றும் அகற்றுவதற்கும், மேற்படி செலவினத்தை பொதுநிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>12.01.2026</td>
<td>723</td>
<td>

**<u>மன்றப்பொருள்:29</u>**

களக்காடு நகராட்சியில் துரய்மை பாரத இயக்ககம் (நகர்புறம் 2.0) திட்டம் 2025–2026ன் கீழ் பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை பணிகளாக கழிவு நீரினை தடுத்தலும், திருப்புதலுமான(Interception Diversion) பணிகளை ரூ. 541.00 இலட்ச திருத்தி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.189/2025/SBM–1 (Part (3), நாள். 02.11.2025ன்படி நிருவாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள 19.12.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எ ண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத் தில்)</th><th>ஒப்பந்த தாரர்க ள்</th><th>கூடுதல்/ குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">துரய்மை இந்தியா திட்டம் (நகர்புறம் 2.0) 2025–26ன் கீழ் பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை பணிகளாக நகரப்பகுதியில் சேகரமாகும் கழிவு நீரினை குழாய் மூலம் படலையார் குளம் பகுதியில் உள்ள சுத்தகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லும் பணி. (Interception and Diversion work for collection of used waste water to STP cum FSTP site in Kalakad Municipality)</td><td rowspan="2">541.00</td><td>திருமதி. S. பொன் மலர், திருநெல்வேலி.</td><td>0.22% கூடுதல்</td></tr>
<tr><td>திரு. P.மாடசாமி, திருநெல்வேலி.</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
</table>

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் அனுமதிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் மத்திய மாநில அரசு பங்களிப்பு தொகை போக நகராட்சி பங்களிப்பு தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

</td>
<td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.P.மாடசாமி என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>12.01.2026</td>
<td>724</td>
<td>
<u>மன்றப்பொருள்:30</u><br>
களக்காடு நகராட்சியில் பொது நிதியின் கீழ் (2025–2026)ன் மேற்கொள்ளப்படவேண்டிய கீழ்கண்ட பணிகளுக்கு 29.12.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி அலுவலத்தில் பழைய கழிப்பறைகள் பராமரிப்பு, புதிதாக டீசல் ஜென்செட் சப்ளை செய்து நிறுவுதல், தரைத்தளங்கள் புதுபித்தல், இடிதாங்கி மற்றும் மேசைகள் அமைத்தல், இதர பராமரிப்பு பணிகள்.</td><td rowspan="2">19.00</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்</td><td>0.75% கூடுதல்</td></tr>
<tr><td>திருமதி. N.M.புஷ்பம்</td><td>0.02% குறைவு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>
மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி.N.M. புஷ்பம் என்பவரது ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>725</td>
<td>
<u>மன்றப்பொருள்:31</u><br>
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு பல்வேறு திட்டப்பணிகளை திறந்து வைக்கவும்/துவக்கி வைக்கவும் 21.12.2025 அன்று திருநெல்வேலிக்கு வருகைதந்ததை முன்னிட்டு களக்காடு நகராட்சி சார்பாக மேற்கொள்ளப்பட்ட அரசு திட்டப்பணிகள் குறித்து கீழ்கண்ட் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்காக ரூ.23688/–செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td>அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>நாளிதழ் பெயர்</th><th>பட்டியல் எண் மற்றும் நாள்.</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>தினத்தந்தி</td><td>2526TVL371066692 / 21.12.2025</td><td>23688</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>726</td>
<td>
<u>மன்றப்பொருள்:32</u><br>
தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு அறிவிக்கை எண். 836 நாள். 16.12.2025ன்படி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ல் சொத்துவரி பெயர் மாற்ற கட்டண விகிதத்தினை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு ஒரே சீரான பெயர்மர்ற்ற கட்டணங்களை நிர்ணயம் செய்ய செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் நகராட்சி நிருவாக இயக்குநரக சுற்றறிக்கை ந.க.எண். 12199/ஆர்1/2025 நாள். 24.12.2025ல் மேற்கண்ட புதிய கட்டண விகிதத்தினை மன்றத்தின் பதிவுக்கு வைத்து உடன் நடைமுறைப்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி களக்காடு நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி பெயர் மாற்றக்கட்டணத்தினை நடைமுறைப்படுத்திட மேற்கண்ட சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>குடியிருப்பு பயன்பாடுகள் (ரூ)</th><th>பிற பயன்பாடுகள் (ரூ) (வணிகம்/தொழிற்சாலை)</th></tr>
<tr><td>1.</td><td>ரூ. 500/-</td><td>ரூ.1000/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மன்றம்அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.3131/25/அ1).
</td>
<td>அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>12.01.2026</td>
<td>727</td>
<td>
<u>மன்றப்பொருள்:33</u><br>
களக்காடு நகராட்சிக்கு சொந்தமான கடைகள் வார்டு எண் : 19 புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வணிக வளாக கடைகள், வார்டு எண் : 20 வியாசராஜபுரம் அண்ணாசாலை பொதுப்பணித்துறை அலுவலகம் அருகிலுள்ள கடைகள் மற்றும் வார்டு எண்: 17 ஜவஹர் வீதி தெருவிலுள்ள பழைய அலுவலகத்தில் அமைந்துள்ள கடைகளுக்கும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 30.12.2025 தேதி அன்று கோரப்பட்டது.
</td>
<td>கடை எண்.5 மற்றும் 11 ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்டு உயர்ந்தபட்ச ஏலம் கேட்ட திரு.M. கொம்பையா மற்றும் திரு.U. உடையார் ஆகியோரின் ஏலத்தினையும்,</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
மேற்கண்ட மறு பொது ஏலத்தில் ஜவஹர் வீதி பகுதியில் உள்ள பழைய பேரூராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள மொத்தம் 12 கடைகள் மற்றும் வியாசராஜபுரம் பொதுப்பணித்துறை அலுவலகம் அருகில் அமைந்துள்ள கடை எண் 11க்கு எந்த நபரும் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை, புதிய பேருந்து நிலைய தரைத்தளம் கடைகளுக்கு அரசு மதிப்பு ரூ.5000/- எனவும் மற்றும் முதல் தளம் கடைகளுக்கு அரசு மதிப்பு ரூ.3000 என நிர்ணயம் பொது ஏலம் நடைபெற்றது. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>கடை எண்.</th><th>பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள்</th><th>ஏலக் கேள்விகள்</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை</th><th>உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூபாய்</th></tr>
<tr><td>1.</td><td rowspan="9">5</td><td>திரு. அந்தோணி சவரிமுத்து</td><td>16,700/-</td><td>பெறப்பட வில்லை</td><td rowspan="9">திரு M.கொம்பையா அவர்கள்ரூ. 16,800 /- உயர்ந்தபட்ச ஏலத் தொகையாக கேட்டுள்ளார்.<br><br>(ஊனமுற்றோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட</td></tr>
<tr><td>2.</td><td>திருமதி . ந. ரெஜினா</td><td>7,600/-</td><td>பெறப்பட வில்லை</td></tr>
<tr><td>3.</td><td>திருமதி ஜெப எஸ்தர் ரஜினி</td><td>8,100/-</td><td>பெறப்பட வில்லை</td></tr>
<tr><td>4.</td><td>திரு சண்முகம்</td><td>16,500/-</td><td>பெறப்பட வில்லை</td></tr>
<tr><td>5.</td><td>திரு வேல்முருகன்</td><td>கேள்வி கோரவில்லை</td><td>பெறப்பட வில்லை</td></tr>
<tr><td>6.</td><td>திருT.அந்தோணிராஜன்</td><td>8,000/-</td><td>பெறப்பட வில்லை</td></tr>
<tr><td>7.</td><td>திரு M.கொம்பையா</td><td>16,800/-</td><td>பெறப்பட வில்லை</td></tr>
<tr><td>8.</td><td>இசை நவின் ராஜ்</td><td>7,500/-</td><td>பெறப்பட வில்லை</td></tr>
<tr><td>9.</td><td>ஜாஸ்மின்</td><td>வருகை தரவில்லை</td><td>வருகை தரவில்லை</td></tr>
</table>
</td>
<td>கடை எண்.24, 28 மற்றும் 31க்கு உயர்ந்தபட்ச ஏலம் கேட்ட திரு.குமார், திரு.நளன் மற்றும் திரு.S. ஜோசப் செல்வின்துரை ஆகியோரின் ஏலம் அனுமதித்து மற்ற கடைகள் மறு ஏலம் விடுவதற்கும், சட்ட விதிமுறைகளை பின்பற்றி செயல்படுவதற்கும் அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | கடை) |
| 10. | 11 | திரு S.சுப்பையா | 7,500/− | பெறப்பட வில்லை | திரு U.உடையார் அவர்கள் ரூ.15, 200/− உயர்ந்தபட்ச ஏலத் தொகையாக கேட்டுள்ளார். (ஊனமுற்றோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை) |
| 11. | | திரு P.சாதிக்அலி | 9,300/ − | பெறப்பட வில்லை | |
| 12. | | திரு S.சுடலைமணி | 7,600/ − | பெறப்பட வில்லை | |
| 13. | | திரு U.உடையார் | 15,200/ − | பெறப்பட வில்லை | |
| 14. | | திரு பா.செல்லப்பன் | 15,100/ − | பெறப்பட வில்லை | |
| 15. | **16** | ஒரு நபர் ஏலத்தில் கலந்து கொண்டதால் மறு ஏலம் நடத்திட முடிவு செய்யப்பட்டது. | | | |
| 16. | **17** | திரு M.சிவகுமார் | வருகை தரவில்லை | வருகை தரவில்லை | ஒரு நபர் ஏலத்தில் கலந்து கொண்டதால் மறு ஏலம் நடத்திட முடிவு செய்யப்பட்டது. |
| 17. | | திரு மு. சுந்தர் | − | பெறப்பட வில்லை | |
| 18. | 18 | ஒரு நபர் ஏலத்தில் கலந்து கொண்டதால் மறு ஏலம் நடத்திட முடிவு செய்யப்பட்டது. | | | |
| 19. | 19 | ஒரு நபர் ஏலத்தில் கலந்து கொண்டதால் மறு ஏலம் நடத்திட முடிவு செய்யப்பட்டது. | | | |
| 20. | 20 | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் கோர யாரும் முன் வரவில்லை. | | | |
| 21. | 21 | ஒரு நபர் ஏலத்தில் கலந்து கொண்டதால் மறு ஏலம் நடத்திட முடிவு செய்யப்பட்டது. | | | |
| 22. | 22 | ஒரு நபர் ஏலத்தில் கலந்து கொண்டதால் மறு ஏலம் நடத்திட முடிவு செய்யப்பட்டது. | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23. | 23 | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் கோர யாரும் முன் வரவில்லை. | | | |
| 24. | 24 | திரு குமார் | 3,600/– | பெறப்பட வில்லை | திரு குமார் அவர்கள் ரூ.3600/– உயர்ந்தபட்ச ஏலத் தொகையாக கேட்டுள்ளார். |
| 25. | | திருமதி K.மாரிசெல்வி | 3,500/– | பெறப்பட வில்லை | |
| 26. | **25** | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் கோர யாரும் முன் வரவில்லை. | | | |
| 27. | **26** | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் கோர யாரும் முன் வரவில்லை. | | | |
| 28. | **27** | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் கோர யாரும் முன் வரவில்லை. | | | |
| 29. | 28 | திரு A.சுரேஷ்குமார் | 3,300/– | பெறப்பட வில்லை | திரு நளன் அவர்கள் ரூ.3,400/– உயர்ந்தபட்ச ஏலத் தொகையாக கேட்டுள்ளார். |
| 30. | | திரு S.அந்தோணி ஜெயராஜ் | கேள்வி கேட்கவில்லை | பெறப்பட வில்லை | |
| 31. | | திரு R.நளன் | 3,400/– | பெறப்பட வில்லை | |
| 32. | 29 | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் கோர யாரும் முன் வரவில்லை. | | | |
| 33. | 30 | பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் கோர யாரும் முன் வரவில்லை. | | | |
| 34. | 31 | திரு M.அருண்குமார் | 3,300/– | பெறப்பட வில்லை | திரு S.ஜோசப்செல்வின்துரை அவர்கள் ரூ.3,400/– உயர்ந்தபட்ச ஏலத் தொகையாக கேட்டுள்ளார். |
| 35. | | திரு S.ஜோசப்செல்வின்துரை | 3,400/– | பெறப்பட வில்லை | |

| | | | |
|---|---|---|---|
| | | <table><tr><td>36.</td><td>**32**</td><td>பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் கோர யாரும் முன் வரவில்லை.</td></tr></table><br>மேற்கண்ட கடை உரிமத்திற்காக உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியவர்களுக்கு கடை உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>வரிசை எண் 7,13,24,31 மற்றும் 35 ஆகியோரின் ஏலக்கேள்விகள் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 2265/2025/அ1) | |